(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 12.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2020 செப்தெம்பர் 25 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

8/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்னவல யானை சரணாலயத்தை பார்வையிடுவதற்கு ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை தருகிறார்கள் என்பதையும்;

(ii) இந்த நிறுவனம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு கூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் பின்னவல யானை சரணாலயத்தை பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு காலாண்டு ரீதியாகவும் வெவ்வேறாகவும் யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் இதனால் கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் ஒவ்வொரு வருடத்துக்கும் காலாண்டு ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பின்னவல யானை சரணாலயத்தை பார்வையிடுவதற்காக வருகை தரும் உல்லாசப்பயணிகளுக்கு யானைக் குட்டிகளுக்கு பால் ஊட்டுவதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பு தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) யானைக் குட்டிகளுக்கு பால் ஊட்டுவதற்காக உல்லாசப்பயணிகளுக்கு வாய்ப்பு வழங்காமையினால் நிறுவனத்துக்கு வருடாந்தம் ஏற்படும் நட்டம் யாதென்பதையும்;

(iv) இலங்கைக்கு பெறுமதிமிக்க ஒரு வளமான பின்னவல யானை சரணாலயத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதையும்;

(v) ஆமெனில், குறிப்பிட்ட வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

52/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட் 19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை ஊழியர்களின் நலநோம்புகைக்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவர்களை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

95/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படையின் சிவில் நிருவாக உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு இணைந்ததாக ஒப்பந்த/ பதில்/ அமைய அடிப்படையில் பாரிய எண்ணிக்கையிலானோர் சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) அவர்கள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கடற்படை பிரிவுகளில் உப அலுவலகங்கள் மற்றும் கடற்படை வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iii) நாளாந்த அடிப்படையில் அவர்களுக்கு சம்பளம் செலுத்தப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எத்திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

117/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முகவரி, மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இக்காலத்தில் இவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் பிற சலுகைகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்த அவர்களது நிர்வாக காலத்தில் தவறிவிட்டனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

121/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்குரியதாக இதுவரை கைச்சாத்திடப் பட்டுள்ள முதலீட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளில் இன்றளவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

127/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் நிலவிய பயங்கரவாதம் முடிவடைந்து பத்து வருடங்கள் கடந்துள்ள போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கிளிநொச்சி முல்லைத்தீவு A 50 பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதான பாலமாகிய 402 மீற்றர் நீளமான வட்டுவாகல் பாலம் இதுவரை எதுவித புனரமைப்பும் செய்யப்படாமல் ஒரு வாகனம் மாத்திரம் பயணிக்கக்கூடியவாறு சேதமடைந்த சிறியதொரு வீதியாக இருப்பதனால் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இது தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் நான் பல சந்தர்ப்பங்களில் இந்த சபையில் குறிப்பிட்டுள்ள போதிலும் அது தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வட்டுவாகல் பாலத்தை இருவழிப் பாதையாக மீண்டும் புனரமைத்து மக்கள் வழமைபோல் போக்குவரத்துச் செய்வதற்காக திறந்துவைக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

159/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்ததால் உயிர்ச் சேதங்கள், வீடுகள் மற்றும் வாகனங்கள் பாதிப்புக்குள்ளாகியது என்பதையும்;

(ii) அதன்போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் வீடுகளுக்கான நட்ட ஈட்டுத்தொகை வழங்க முடிந்ததென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்ததால் சேதத்துக்குள்ளான வாகனங்களுக்காக —

(i) நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) நட்டஈடு வழங்கப்படும் முறைமை யாதென்பதையும்;

(iii) நட்டஈட்டைக் கோரி கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) நட்டஈடு வழங்குவதற்காக அரசாங்கத்தால் மதிப்பீடொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அம்மதிப்பீட்டுக்கு அமைவாக நட்டஈடு வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நட்டஈடு வழங்கப்படாத வாகனங்களுக்காக நட்டஈடு வழங்கப்படும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

211/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அலுமினியத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அலுமினியம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி அலுமினியத்தினை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு அலுமினியம் இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

250/2020

கௌரவ வேலுகுமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) கண்டி மாவட்டத்தின் தெல்தெனிய பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வைத்தலாவ தோட்டத்தில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் "உதா கம்மான வீட்டு திட்டம்" ஆரம்பிக்கபட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள —

(i) ஒவ்வொரு உதா கம்மான வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஒவ்வொரு பயனாளிக்கும் —

(i) பெற்றுத்தருவதாக இணங்கிய தொகை;

(ii) பெற்றுக்கொடுக்கப்படும் மொத்தத் தொகையில் கடன் தொகை;

(iii) பெற்றுக்கொடுக்கப்படும் மொத்தத் தொகையில் உதவித் தொகை;

(iv) இற்றைவரையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள தொகை;

தனித்தனியே எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு பயனாளிக்கும் எஞ்சிய பணத்தை பெற்றுக்கொடுத்து இக்கருத்திட்டத்தை பூர்த்திச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

10.

303/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழக மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டிற்கான ஒரு இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ள பின்னணியில் —

(i) இலங்கையில் பல்வகை திறந்த பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) உயர் கல்வியினை பெறுவதற்கு எதிர்பார்க்கும் எவ் வகுதியினரை இலக்குவைத்து தொலைக்கல்வி வசதிகளை விரிவாக்குவதற்கு அரசு நோக்கம் கொண்டுள்ளதென்பதையும்;

(iii) தொலைக் கல்வி வாய்ப்புகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கு எதிர்காலத்திலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் நிதியத்தின் கீழ் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் தொடர்ந்தும் செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது எந்த அதிகார முறைமைக்கு உட்படுத்தப்படுமென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பணிகளுக்ககாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) பல்கலைக்கழகத்திற்காக உறப்படும் செலவினத்தில் அரசின் பங்களிப்பு எவ்வளவு என்பதையும்;

மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

344/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை சக்தி நிதியத்தில் ஆரம்பம் தொடக்கம் இதுவரையில் உள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இந்நிதியத்தின் மூலமாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) தேயிலை சக்தி நிதியத்தின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை அங்கத்துவம் பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இந்நிதியத்திற்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேயிலை சக்தி நிதியத்தின் மூலமாக தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) அதற்கென செலவிடப்படுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்?

(v) தொழிற்சாலைகளுக்கென முதலீடு செய்யப்பட்ட பணத்தொகையினால் ஏதேனும் இலாபம் கிடைக்கின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி இலாபம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

417/2020

கௌரவ சுஜித் பெரேரா,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தின் யடியந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் வீ ஒய என்ற பெயரில் நீர்த்தேக்கம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தால் இடம்பெயர நேரிடும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இடம்பெயரும் குடும்பங்களை மீளக்குடியமர்த்த எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் காரணமாக இடம்பெயரும் நபர்களின் வீடுகள் மற்றும் காணிகளுக்கு இழப்பீடு வழங்கும் முறைமை யாதென்பதையும்;

(iv) இடம்பெயரும் அம்மக்கள் தொடர்பாக எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையெனவும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

57/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) குருநாகல் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்டர் சாபி எனும் மருத்துவர் சிங்களப் பெண்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டாரென குற்றச்சாட்டுகள் எழுந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் இவருக்காக ஆஜராகிய சட்டத்தரணிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மருத்துவருக்கு எதிராக இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இந்த மருத்துவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு பாதிப்புக்குள்ளாகிய தாய்மாருக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

99/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வில்பத்து தேசிய வனப்பூங்காவை முதன்மையாகக் கொண்ட வனப்போர்வை மனித செயற்பாடுகள் காரணமாக அழிவடைகிறது என்பதையும்;

(ii) வடமத்திய மாகாணம் ஏற்கனவே பகுதியளவில் பாலைவனமாக மாறியுள்ளது என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது இலங்கையின் ஒட்டுமொத்த காலநிலையினையும் பாதித்துள்ளது என்பதையும்;

(iv) ஆகையால், இலங்கையில் தொடர்ச்சியாக யாதேனும் ஒரு பிரதேசம் வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக புத்திஜீவிகள் குழுவொன்றின் வாயிலாக ஆய்வொன்றினை மேற்கொள்வது உகந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

15.

123/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்கென இலங்கை முதலீட்டுச் சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அக்காணிகள் கையகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்காணிகளுக்காகச் செலுத்தப்பட்ட பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) அக்காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணிகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதும் அவற்றுக்கான விளைச்சல்களைப் பெறுகின்றதுமான நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## அனுதாபப் பிரேரணைகள்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ஆர்.எம்.கே.பீ. இரத்நாயக்க.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 19 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 19

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கு நேரெதிராக குறிப்பீடு செய்யப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 640,000,000 இருந்து ரூபா. 595,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 20 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | <u>விடயம்</u> | <u>திருத்தம்</u> |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 2,400,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 1,500,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 21 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | <u>விடயம்</u> | <u>திருத்தம்</u> |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 40,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 22 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 22

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 440,000,000 இருந்து ரூபா. 360,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதியாண்டு 2019 தொடர்பில், 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுக் கட்டளை இலக்கம். 01

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00201, 02001, 02401, 05101, 05201, 05301, 05401, 05501, 05601, 13001, 15801, 20101, 22301, 22401, 22501, 23101, 28301, மற்றும் 33101 ஆகியவை தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் (ரூபா) | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக் குறைந்த எல்லைகள் (ரூபா) | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | பிரதம அமைச்சர் அலுவலகம் | 00201 | 23,000,000 | 21,000,000 | 11,000,000 | 9,500,000 | 77,000,000 | 76,500,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | 18,000,000 | 20,000,000 | 95,000,000 | 115,000,000 | 2 |
| 3. | தேசிய கொள்வனவு ஆணைக்குழு | 02401 | 1,200,000 | 2,100,000 | | | 3,000,000 | 4,000,000 | 3 |
| 4. | டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05101 | | | 2,500,000 | 1,300,000 | | | 4 |
| 5. | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05201 | | | 22,300,000 | 20,000,000 | | | 5 |
| 6. | பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05301 | | | 2,500,000 | 170,000 | | | 6 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05401 | | | 4,400,000 | 3,200,000 | | | 7 |
| 8. | வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05501 | 1,000,000 | 3,500,000 | 200,000 | 2,500,000 | 6,000,000 | 25,000,000 | 8 |
| 9. | விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05601 | | | 300,000 | 120,000 | | | 9 |
| 10. | பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சர் | 13001 | 40,000,000 | 65,000,000 | 23,200,000 | 42,000,000 | 85,000,000 | 206,000,000 | 10 |
| 11. | அரச தொழில் முயற்சிகள், கண்டிய மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் | 15801 | 4,200,000 | 5,700,000 | 2,000,000 | 2,500,000 | | | 11 |
| 12. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 20,500,000 | | | 12 |
| 13. | இலங்கை கடற்படை | 22301 | | | 510,000,000 | 440,000,000 | | | 13 |
| 14. | இலங்கை விமானப்படை | 22401 | | | 418,000,000 | 380,000,000 | | | 14 |
| 15. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,080,000,000 | 1,060,000,000 | | | 15 |
| 16. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 500,000 | 449,000 | | | 16 |
| 17. | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 28301 | | | 71,000,000 | 66,000,000 | | | 17 |
| 18. | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | | | 275,000,000 | 255,000,000 | | | 18 |

(இக்கட்டளைகள் 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.